# தமிழ்நாடு தட்டச்சு - கணினி பள்ளிகள் சங்கம்
# TAMILNADU TYPEWRITING - COMPUTER INSTITUTES' ASSOCIATION

(Regd. No : 43/2016)

Regd. Office : # 555/18, Gandhi Road, (Ist Floor), Kanchipuram - 631 501.
Communication Address : #M.61. TNHB Qtrs,Complex, Kanchipuram - 631502
web : www.tntcia.com

**L. SENTHIL**, B.C.A.,D.C.P.,T.T.C.,
State President,
CELL : 9443082572

**J. BARATHAMANI**, T.T.C.,
State General Secretary,
CELL : 9003489826

**L. MANOHARAN**, T.T.C.,
State Treasurer,
CELL : 9442883275

**V. KALAIVANAN**, B.COM, M.A, PGDCA.,
Vice Presedent

**A.M. SATHYAN**
Vice President

**M. DURAIPANDI**, B.A, T.T.C.,
Joint Secretary

**V. CHANDIRASEKARAN**, M.A, M.COM, B.ED.,
Joint Secretary

**M. KARTHIKEYAN**, M.COM, M.PHIL, M.A, D.L.L, A.L.,
Founder Adviser

**D.A. DHARMARAJ**, B.A.,
Honorary President


நாள் : 19.05.2020

<u>மூடப்பட்டிருக்கும் தட்டச்சுப் பயிலகங்களை திறந்திட அனுமதி வேண்டி விண்ணப்பம் சமர்ப்பித்தல்.</u>

பெறுதல்

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்,**
தமிழக அரசு,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை — 600 009.

ஐயா,

கருணை உள்ளம் கொண்ட **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின்** கனிவான கவனத்திற்கு தமிழகத்தில் உள்ள அரசு அங்கீகாரம் பெற்ற அனைத்து தட்டச்சுப் பயிலகங்களின் சார்பாக விண்ணப்பம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

தமிழகத்தில் 3500 க்கும் மேற்பட்ட அரசு அங்கீகாரம் பெற்ற தட்டச்சுப் பயிலகங்கள் இயங்கி வருகின்றன. தமிழக அரசின் கொரோனா ஊரடங்கு உத்திரவிற்கிணங்க கடந்த மார்ச் 18ம் தேதியிலிருந்து பயிலகங்கள் மூடப்பட்டு இன்று வரை நான்கு கட்ட ஊரடங்கு உத்திரவுகளையும் நாங்கள் அனைவரும் எவ்வித தயக்கமுமின்றி பின்பற்றி வருகிறோம்.

தமிழகத்தில் உள்ள அரசு அங்கீகாரம் பெற்ற தட்டச்சுப் பயிலகங்கள் அரசின் சட்டதிட்டங்களுக்குட்பட்டு மீண்டும் திறந்திட அனுமதி வேண்டி கடந்த 08.05.2020ம் நாள் அன்று எங்களது சங்கத்தின் சார்பாக கோரிக்கை மனு சமர்ப்பித்திருந்தோம்.

ஆதலால் சமீபத்தில் அரசால் வெளியிடப்பட்ட தளர்வுகளில் தட்டச்சுப் பயிலகங்கள் நடத்திட தளர்வாணை கிடைக்கும் என எதிர்பார்த்திருந்தோம். ஆனால் எங்களுக்கு அனுமதி வரப்பெறவில்லை. இருப்பினும் எங்களது தாழ்மையான கோரிக்கைகளையும், கருத்துக்களையும் தாய்மை உள்ளம் கொண்ட **மாண்புமிகு தமிழக முதல்வர்** அவர்கள் பரிசீலித்து தமிழகத்தில் உள்ள சுமார் 3500க்கும் மேற்பட்ட தட்டச்சுப் பயிலக குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மீட்டுக் கொடுக்க வேண்டுமாய் பணிவோடு கேட்டுக் கொள்கின்றோம்.

..2.

**பள்ளி, கல்லூரி மற்றும் பயிற்சி மையங்களுக்கும் தட்டச்சுப் பயிலகங்களுக்கும் உள்ள வித்தியாசங்களை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

- தட்டச்சுப் பயிலகங்களில் ஒருபோதும் மாணாக்கர்கள் தேக்கம் அடைவதில்லை.
- பயிற்சி மையங்களைப் போல ஆயிரக்கணக்கான மாணாக்கர்கள் ஒரே நேரத்தில் பயிலும் நிலை தட்டச்சுப் பயிலகங்களில் இல்லை.
- குறைந்த அளவு மாணாக்கர்களே பயிலும் நிலை. அதாவது மொத்தமே 50 முதல் 100 க்குள்ளாகவே இருக்கும்.
- அதேபோல் ஒவ்வொரு மாணவருக்கும் ஒதுக்கப்படும் நேரம் 1 மணி நேரமே ஆகும். ஆக ஒரு மாணவர் 1 மணி நேரமே பயிலகத்தில் இருக்கும் நிலை.
- மாணவர் கூட்டமாகச் சேர்ந்து மற்ற மாணவர்களோடு பேசுவதோ, கலந்துரையாடவோ வாய்ப்பே இல்லை.
- ஏனெனில் ஒரு மாணவர் வந்தவுடன் பேப்பர் வைத்து அவருக்குண்டான பயிற்சியினை தட்டச்சு செய்யவே நேரம் சரியாக இருக்கும்.
- ஒரு மணி நேரத்தில் குறைந்தளவு 10 முதல் 15 மாணவர்கள் வரையிலேயே தட்டச்சு பயிற்சி மேற்கொள்ளும் நிலை.
- மேலும் ஒரு தட்டச்சுப் பொறிக்கும் மற்றொரு தட்டச்சுப் பொறிக்கும் ஏற்கனவே 1 மீட்டர் இடைவெளி உள்ளது. அப்போதுதான் ஒரு பொறியோடு மற்றொரு பொறி இடிக்காமல் இருக்கும்.
- இருப்பினும் நாங்கள் இந்த இடைவெளியை இன்னும் அதிகப்படுத்திக் கொள்ளவும் தயாராக உள்ளோம். மேலும் குறைவான இடவசதி உள்ள பயிலகமாக இருந்தாலும் அதற்கேற்றார்போல் தட்டச்சுப் பொறிகளின் எண்ணிக்கையை குறைத்து இடைவெளியை அதிகப்படுத்திக் கொள்ளவும் தயாராக இருக்கிறோம்.
- மேலும் தட்டச்சுப் பயிலகங்களுக்கு பயில வருகின்ற மாணவர்கள் மிகப்பெரும்பாலும் பயிலகம் அமைந்துள்ள சுற்றுப்பகுதியைச் சார்ந்தவர்களே ஆவார்கள். அவர்கள் கால்நடைகளாகவோ அல்லது இருசக்கர வாகனங்களிலோ வரும் நிலைதான் உள்ளது. எனவே பகுதி விட்டு பகுதி வந்து பயிலும் நிலை இல்லை.

**எங்களின் தற்போதைய நிலை:-**

- தட்டச்சுப் பயிலகங்களில் சுமார் 75 விழுக்காட்டிற்கு மேலாக வாடகைக் கட்டிடத்திலேயே இயங்கி வருகிறது. எவ்வித வருமானமும் இல்லாமல் 3 மாத வாடகை பாக்கி மற்றும் மின்கட்டணம் செலுத்த வேண்டிய நிலை.
- வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு அன்றாட வாழ்க்கை நடத்துவதற்கே சிரமப்படும் நிலை.
- தட்டச்சுப் பயிலகங்களில் பணிபுரியும் ஊழியர்களின் குடும்பங்கள் வறுமையால் வாடுகின்ற நிலை. எங்களோடு சேர்ந்து ஏறக்குறைய 10,000க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்வாதாரம் இன்றி தவிக்கும் நிலை.
- பயிற்சி நிறுவனங்களைப் போல் நாங்கள் ஒட்டுமொத்தமாக பணம் வசூலிப்பதில்லை.
- குறைவான மாதக்கட்டணத்தை மட்டுமே பெற்றுக்கொண்டு ஆயிரக்கணக்கான தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்தர்களை உருவாக்கி வருகின்றோம்.
- நாங்கள் அனைவரும் நடுத்தரக் குடும்பத்தைச் சார்ந்தவர்களே ஆவோம் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் எங்களது கோரிக்கையினை பரிசீலித்து தளர்வுகள் அளிக்கும்பட்சத்தில் நாங்கள் தமிழக அரசின் கொரோனா தடுப்பு நடவடிக்கைக்களை பின்பற்ற கீழ்க்கண்ட அனைத்து விதிமுறைகளையும் பின்பற்றிடுவோம் என உறுதி அளிக்கின்றோம்.

- ✓ மாணவர்கள் பயிற்சி மேற்கொள்ளும் தட்டச்சுப் பொறிகள் ஒவ்வொன்றிற்கும் அரசு நிர்ணயிக்கின்ற இடைவெளி பின்பற்றப்படும்.
- ✓ மாணவர்கள் உள்ளே நுழையும்போது **Hand Sanitizer** வழங்கப்படும்.
- ✓ முகக்கவசம் அணிந்து வருபவர் மட்டுமே பயிலகத்தின் உள்ளே அனுமதிக்கப்படுவர்.
- ✓ பயிலகத்தில் நாள்தோறும் இரு நேரங்களிலும் கிருமி நாசினி தெளிக்கப்படும்.
- ✓ சளி, இருமல் அறிகுறி தென்படும் மாணவர்களுக்கு அனுமதி மறுக்கப்படும். மீண்டும் மருத்துவச்சான்று அளித்தபின்னரே பயிற்சிக்குச் சேர்க்கப்படுவர்.
- ✓ கண்டிப்பாக சமூக இடைவெளி பாதிக்காவண்ணம் ஒவ்வொரு பேட்சிற்கும் குறைவான மாணவர்களையே அனுமதிப்போம் எனவும் உறுதி அளிக்கின்றோம்.

..4..

தற்போதுள்ள சூழ்நிலையில் பயிலகம் அமைந்துள்ள இடத்திற்கான வாடகை, மின் கட்டணம், பணியாளர் சம்பளம் மற்றும் எங்களது குடும்ப வாழ்வாதார பாதிப்பை சீரடையச் செய்வதற்காகவே நாங்கள் உங்களிடம் இந்த கருணை மனுவை தங்களின் கனிவான பார்வைக்குச் சமர்ப்பிக்கின்றோம் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் நாள்தோறும் **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்** வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு தவிக்கும் அனைத்து தொழில் நிறுவனங்களுக்கும் கொரோனோ தடுப்பு நடவடிக்கைகளுக்குட்பட்டு தளர்வுகள் அளித்து வருவதை கண்ணுற்று மிகுந்த மகிழ்ச்சி கொள்கின்றோம். குறிப்பாக டீக்கடைகள், சிறு வியாபாரிகள், முடிதிருத்தும் நிலையங்கள் போன்ற தொழில் செய்வோர்களின் கோரிக்கைகளை பரிசீலித்து உடன் நிவாரணம் வழங்கிய தாயுள்ளம் கொண்ட நீங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ள எங்களது கோரிக்கையினையும் பரிசீலித்து **தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு அங்கீகாரம் பெற்ற தட்டச்சுப் பயிலகங்களும் அரசின் சட்டவிதிகளுக்குட்பட்டு மீண்டும் திறந்திட உத்திரவு பிறப்பிக்க ஆவன செய்ய வேண்டுமாய் தாழ்மையுடன் வேண்டிக் கேட்டுக் கொள்கின்றோம்.**

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள,

19/5/2020

**(எல். செந்தில்)**
**மாநிலத் தலைவர்.**

**நகல்:**

1. மாண்புமிகு **உயர்கல்வித்துறை அமைச்சர்** அவர்கள், தமிழக அரசு, சென்னை
2. உயர்திரு. **உயர்கல்வித்துறை செயலாளர்** அவர்கள், தமிழக அரசு, சென்னை.
3. **தலைவர்** அவர்கள், தொழில்நுட்பத்தேர்வு வாரியம், சென்னை.25